செ.வெ.எண்.59 நாள்:23.04.2017

**திருநெல்வேலியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு திருமாங்கல்ய தங்கம் மற்றும் உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் 1209 பயனாளிகளுக்கு ரூ.5.18 கோடி மதிப்பிலான தங்கம் மற்றும் உதவித் தொகையினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் வழங்கினார்.**

-----

திருநெல்வேலி பாளையங்கோட்டை கேடிசி நகர் மாதா மாளிகையில்் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு திருமாங்கல்ய தங்கம் மற்றும் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 4 கிராம் தங்கம் மற்றும் உதவித் தொகை வழங்கும் விழா மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (23.04.2017) நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு 1209 பயனாளிகளுக்கு ரூ.5.18 கோடி மதிப்பிலான தங்கம் மற்றும் உதவித் தொகையினை வழங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன், திருமதி.வசந்தி முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

சிந்தனையில் தெளிவையும், செயலில் உயர்வும் கொண்டு தமிழகத்தை வழிநடத்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தியாவில் தமிழகத்தில் மட்டும் தான் விலையில்லா ஆடுகள், கறவை மாடுகள் வழங்கும் திட்டம், தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், மாணவ, மாணவியர்களுக்கு மடி கனிணி வழங்கும் திட்டம், வீடில்லாத ஏழைகளுக்கு பசுமை வீடுகள் திட்டம், விலையில்லா அரிசி வழங்கும் திட்டம், முதியோர்களுக்கு உதவித் தொகையாக மாதம் ரூ.1000 வழங்கும் திட்டம், உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை தந்து தமிழகத்தை நிலை நிறுத்திய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். பதவி ஏற்றவுடனே விவசாயிகள், ஏழை மக்களுக்கான பல திட்டங்களை அறிவித்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான் பெண்களுக்கான திட்டங்களை வாரி வழங்கி பெண் குலத்திற்கே பெருமை சேர்த்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான் ஒரு பெண் ஏற்றம் பெற்றால் வீடு சிறக்கும், ஊர் சிறக்கும், நாடு சிறக்கும் எனும் பாரதி, பாரதிதாசன் கண்ட கனவை நிறைவேற்றிய ஒரே தலைவர் நம் புரட்ச்சித் தலைவி அம்மா அவர்கள் தான்.

இன்று நடைபெறும் விழாவில் 1209 பயனாளிகளுக்கு ரூ.5.18 கோடி மதிப்பிலான திருமாங்கல்ய தங்கம் மற்றும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. திருமண உதவித் தொகையுடன் 4 கிராம் தங்கம் வழங்கப்பட்டதை 8 கிராமாக உயர்த்தி உத்தரவிட்டவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான். வேலைக்கு செல்லும் மகளிர்களுக்கு மானிய விலையில்

பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டத்தையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான் கொண்டு வந்தார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று இல்லையென்றாலும் அவர்களது அரசு ஏழைமக்களுக்கு அவரது திட்டங்களை விட்டுச் சென்ற பணிகளை இம்மி அளவிற்க்கு குறையாமல் தொடர்ந்து செயல்படுத்தும் நீங்கள் அனைவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசிற்கு ஆதரவாக இருக்க வேண்டும் என மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:-

தமிழக அரசின் அனைத்து திட்டங்களும் திருநெல்வேலி மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. சமூக நலத்துறையின் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு திருமண உதவித் திட்டத்தின் கீழ் தங்கம் மற்றும் உதவித் தொகைகள் கடந்த 6 ஆண்டுகளில் பட்டப்படிப்பு படித்த 11517 பயனாளிகளுக்கும், பட்டமல்லாத 21271 பயனாளிகளுக்கும் என மொத்தம் 32788 பயனாளிகளுக்கு ரூ.110.97 கோடி நிதியுதவியும், ரூ.34.75 கோடி மதிப்பிலான தங்கமும் என மொத்தம் ரூ.145.72 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெறும் இந்த விழாவில் பட்டம் படித்த 354 பயனாளிகளுக்கு உதவித் தொகை தலா ரூ.50,000 வீதம் ரூ.1.77 கோடியும், பட்டமல்லாத 855 பயனாளிகளுக்கு ரூ.25,000 வீதம் ரூ.2.13 கோடி உதவித் தொகையும் என மொத்தம் 1209 பயனாளிகளுக்கு உதவித் தொகையாக ரூ.3.90 கோடியும், ரூ.1.28 கோடி மதிப்பிலான தங்கமும் சேர்த்து மொத்தம் 5 கோடியே 18 லட்சம் மதிப்பில் தங்கம் மற்றும் உதவித் தொகை வழங்கப்படுகிறது என பேசினார்.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.வீ.உமாதேவி, பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.தங்கராஜ் டான்பெட் துணைத்தலைவர் திரு.கண்ணன், ஆவின் தலைவர் திரு.ரமேஷ், அக்ரோ சேர்மன் திரு.மகபூப்ஜான், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட நெசவாளர் சங்கத்தலைவர் திரு.ஆறுமுகம், மற்றும் சுதா கே.பரமசிவம், அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.